# அருப்புக்கோட்டை நகராட்சி

விளம்பி ஆண்டு பஙகுனி மாதம் நாள் : 03.04.2018 செவ்வாய் கிழமை மாலை 3.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :– திருமதி.ரா.ஜெகதீஸ்வரி**
**தனி அலுவலர்**

**பொருள் 1 :** அருப்புக்கோட்டை நகராட்சியிலிருந்து வழஙகப்படும் செலவினப்பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும் GST/SGST தொகையினைதிரும்ப வணிகவரித்துறைக்கு மாதந்தோறும் 20ம் தேதிக்குள் Return filing செய்வதற்கு கட்டணம் ரூ.500/– ஆகும் என திரு.R.அழகுசுந்தரவேல், வரி ஆலோசகர் தனது 26.02.2018ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நகராட்சியிலிருந்து ஜனவரி 2018 முதல் Return filing செய்யப்பட்டுவிடுவதால் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் 2008 முதல் மூன்று மாதத்திற்கு ரூ.500/– வீதம் வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4597/2017/பி2

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.396**

**பொருள் 2 :** அருப்புக்கோட்டை நகராட்சியின் 2017–18ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்டமதிப்புக்கும் மற்றும் 2018–19ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்புக்கும் நகர்மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் சமர்பிக்கப்படுகிறது.

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.397**

**பொருள் 3 :** சென்னை உயர்நீதிமன்றம் மதுரை பெஞ்ச்கிளை வழக்கு எண்.WP (MD)No.6096/2017 அருப்புக்கோட்டை நகராட்சி திரு.எஸ்.பாலு என்பவர் பிறப்பு சான்றிதழில் பெயர் திருத்தம் செய்ததற்காக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி ஆணையாளரை முதல் பிரதிவாதியாகவும் இரண்டாம் பிரதிவாதியாக துப்புரவு ஆய்வாளர் அவர்களை சேர்க்கப்பட்டுள்ளது. நகராட்சி சார்பாக உயர்நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு திரு.என்.திலீப்குமார் அவர்களை நியமனம் செய்யவும் மேற்படி வழக்கிற்காகும் வழக்கு கட்டணம் ரூ.8000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.3223/2018/எச்2

**தீர்மானம் :**
மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.
**தீர்மான எண்.398**

**பொருள் 4 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் புணரமைப்பு பணிகளானது உள்கட்டமைப்பு மற்றும் இடைவெளி நிரப்பும் நிதி 2016–17 ன்கீழ் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேற்கண்ட பணிகளுக்கு நகராட்சி நிர்வாக முதன்மை பொறியாளர், சென்னை அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி ந.க.எண்.25306/18/2016/பி2 நாள் 24.11.2016 ன் படி பெறப்பட்டுள்ளது. இதில் உயர்மின் கோபுர விளக்கு அமைக்கும் பணிக்கு ரூ.8.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.356, நாள்.14.02.2018ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 22.02.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.S.ஹர்ஷவர்த்தனன்<br>அருப்புக்கோட்டை | 0.01% மதிப்பீட்டு<br>விலையை விட குறைவாக |
| 2. | திரு.D.சிவகுமார் | 1.94% மதிப்பீட்டு |

அருப்புக்கோட்டை விலையை விட அதிகம்

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.ஹர்ஷவர்த்தனன், அருப்புக்கோட்டை அவர்கள் மதிப்பீட்டு விலையைவிட 0.01 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

மேலும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.8687/2016/இ1

**<u>தீர்மானம் :</u>**

மன்றப்பொருள்அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.399</u>**

தனிஅலுவலர்

அருப்புக்கோட்டை நகராட்சி